இப்படிப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அவர்கள் குடியேறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிநீர் வசதி கொடுக்காத காரணத்தால் அவர்களெல்லாம் குடிபுகாமல் மறுத்துவிட்டார்கள். குடிநீர் வசதிகள் அமைக்கப்பட்டு இப்பொழுது அவர்கள் குடியேறி விட்டார்கள். தெருவிளக்கு சம்பந்தப்பட்டதைப் பொறுத்த வரையில், தெரு விளக்குகள் அமைக்க தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கும் வீடுகளுக்குக் குடிவராத சூழ்நிலை இலங்கைத் தமிழர்களுக்கு உண்டு. அது அங்கு மட்டுமல்ல, குறிப்பாக நீலகிரி மாவட்டத்திலே அவர்கள் வாழ வழியின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசு புதிய திட்டங்கள் ஏதாவது வைத்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அதை விளக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்வி தென்னார்க்காடு மாவட்டம் குறிஞ்சிப் பாடி, நெய்வேலி பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் நீலகிரி மாவட்டத்தைப்பற்றிக் கேட்கிறார்கள். அதைப் பற்றித் தனிக் கேள்வி போட்டால் தகவல் கொடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 16–2–1982 ஆம் தேதியிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have recevied with satisfaction your Resolution thanking me for Address on the 1st February 1982 to the Members of the legislature"